# வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்
## செய்தி மடல் 3

**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE INC.**

# NEWSLETTER 3 -2009


**P.O. Box 557, WENTWORTHVILLE - 2145**
**Web: www.wtsc.org.au**
**Email : info@wtsc.org.au**
**Phone : 0419 784 022**


## 11-07-2009

நாட்காட்டி - தவணை 3 - 2009

| வாரம் | திகதி | நிகழ்வு |
|---|---|---|
| 1 | 01-Aug-09 | அரை ஆண்டுப் பரீட்சை - ஆண்டு 3, ஆண்டு 4 தவிர்ந்த ஏனைய வகுப்புகள்<br>வழமையான வகுப்பு - ஆண்டு 3, ஆண்டு 4 |
| 2 | 08-Aug-09 | அரை ஆண்டுப் பரீட்சை - ஆண்டு 3, ஆண்டு 4<br>வழமையான வகுப்பு - ஏனைய வகுப்புகள்<br>புகைப்படம் எடுத்தல், கலைவிழா மலருக்கான ஆக்கம் கையளித்தல் |
| 3 | 15-Aug-09 | வழமையான வகுப்பு |
| 4 | 22-Aug-09 | வழமையான வகுப்பு |
| 5 | 29-Aug-09 | **கலைவிழா ஒத்திகை** |
| 6 | 05-Sep-09 | வழமையான வகுப்பு |
| | 06-Sep-09<br>**SUNDAY** | **கலைவிழா** |
| 7 | 12-Sep-09 | வழமையான வகுப்பு |
| 8 | 19-Sep-09 | வழமையான வகுப்பு |
| 9 | 26-Sep-09 | வழமையான வகுப்பு |
| 10 | 03-Oct-09 | வகுப்பு வேலை; 3ம் தவணை இறுதி நாள் |

## கலைவிழா

எமது பாடசாலையின் கலைவிழா இந்த வருடம் புரட்டாதி மாதம் 6ம் திகதி (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2:00 மணிக்கு **Campbell Street, Blacktown** இல் அமைந்துள்ள **Bowman Hall** இல் நடைபெறும்.

இவ்வருட கலைவிழாவின் கருப்பொருள் **"ஒற்றுமையே பலம்"** என்பதாகும். கலைவிழா நிகழ்ச்சிகள் இக்கருப்பொருளை பிரதிபலிக்கும் வகையில் அமையும். கலைவிழாவை சிறப்பாக நடாத்துவதற்கு பெற்றோரின் ஆக்கபூர்வமான எண்ணங்களையும், உதவியையும் மற்றும் அயராத உழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலைவிழா ஆண்டு மலருக்கான வகுப்புநிலை புகைப்படங்கள் **08.08.2009** அன்று பாடசாலை நேரத்தில் எடுக்கப்படும். மாணவர்களும் ஆசிரியர்களும் கலாச்சார உடைகளில் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கலைவிழா ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்கான ஆக்கங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. உங்கள் ஆக்கங்கள் கலைவிழாவின் கருப்பொருளை தழுவியிருந்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். மாணவர்கள் தமது ஆக்கங்களை கொடுக்கப்பட்ட விசேட தாளிலே தயாரிக்க வேண்டும். இந்த விசேட தாள்களை வகுப்பாசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்களை **08.08.2009** திகதிக்கு முன்னதாக வகுப்பாசிரியர்களிடம் சமர்ப்பிக்கவும்.

## அரை ஆண்டுப் பரீட்சை

இவ்வருட அரை ஆண்டுப் பரீட்சை கீழ்வரும் கால அட்டவணைக்கு ஏற்றவாறு நடைபெற இருக்கின்றது. மாணவர்கள் அதற்கு ஆயத்தமாக வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

| திகதி | வகுப்பு |
|---|---|
| 01-Aug-09 | முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, ஆண்டு 1, ஆண்டு 2, ஆண்டு 5, ஆண்டு 6, ஆண்டு 7, ஆண்டு 8, ஆண்டு 9, ஆண்டு 10Y |
| 08-Aug-09 | ஆண்டு 3, ஆண்டு 4 |

## தமிழ் எழுத்து திறமை

மாணவர்களின் தமிழ் எழுத்து திறமையை வளர்ப்பதற்காக இந்த செய்தி மடலுடன் இரு அட்டவணைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு அட்டவணையின் முதலாவது வரிசையில் உயிரெழுத்துக்களும் முதலாவது நிரையில் மெய்யெழுத்துக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்வதால் உருவாகும் உயிர்மெய்யெழுத்துகளை பெற்றோரின் உதவியுடன் அல்லது இரண்டாவது அட்டவணையின் உதவியுடன் எழுதிப் பழகவும்.

## விசேட செயற்திட்டம்

மாணவர்களின் தமிழ்மொழியாற்றல் மற்றும் வாய்மொழித் தொடர்பாற்றலை ஊக்குவிப்பதை அடிப்படையாகக் கொண்ட விசேட பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மாணவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சிகளை **11.07.2009** திகதிக்கு முன்னதாக தமது வகுப்பாசிரியர்களிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்கள். இந்த விசேட பயிற்சிகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கிய யாவருக்கும் பாடசாலை நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. அடுத்த தவணை பயிற்சிகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு அதற்கேற்றவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

## மாணவர் விபரங்கள்

மாணவர்களின் சரியான விபரங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பச்சை நிறப்படிவம் மாணவர்களுக்கு கடந்த வாரம் பாடசாலை வகுப்பிலே வழங்கப்பட்டது. பெற்றோர்கள் சிரமம் பாராமல் அதனைப் பூர்த்தி செய்து மிக விரைவில் பாடசாலையில் கையளிக்கவும்.

## பேச்சுப் போட்டி 2009

எமது பாடசாலையின் இவ்வருடப் பேச்சுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. மாணவர்கள் மிகவும் திறமையாக சொற்சுவை பொருட்சுவையுடன் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றியதற்கு எமது பாராட்டுகளையும், போட்டிகளை சிறப்பாக நடாத்துவதற்கு தமது உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய பெற்றோர், ஆசிரியர்கள், நடுவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பாடசாலை நேரம்

எமது பாடசாலை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும். எல்லா மாணவர்களும் குறைந்தது 5 நிமிடங்களுக்கு முன்னதாக பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பாடசாலை முன்பள்ளி (Pre-School) மற்றும் ஆரம்பப்பள்ளி (Kindergarten) மாணவர்களுக்கு பிற்பகல் 4.20 மணிக்கும் மற்றைய மாணவர்களுக்கு பிற்பகல் 4.30 மணிக்கும் முடிவடையும். பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி மாணவர்களை பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாக அவர்களின் வகுப்பறைகளுக்குச் சென்று கூட்டிச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பாடசாலை தவணைக் கட்டணம்

கடந்த வருடத்திற்கான பாடசாலை தவணைக் கட்டணத்தை இன்னும் செலுத்தாதவர்களும் இந்த வருடத்திற்கான தவணைக் கட்டணத்தை செலுத்தாதவர்களும் தயவு செய்து அவற்றை செலுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்குதல்

பாடசாலை இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்குவதற்கு பெற்றோர்களின் உதவி தேவைப்படுகின்றது. இதற்கு உதவி செய்ய விரும்பும் பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# தமிழ் எழுத்துகள்

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | | | | | | | | | | | | |
| ங் | | | | | | | | | | | | |
| ச் | | | | | | | | | | | | |
| ஞ் | | | | | | | | | | | | |
| ட் | | | | | | | | | | | | |
| ண் | | | | | | | | | | | | |
| த் | | | | | | | | | | | | |
| ந் | | | | | | | | | | | | |
| ப் | | | | | | | | | | | | |
| ம் | | | | | | | | | | | | |
| ய் | | | | | | | | | | | | |
| ர் | | | | | | | | | | | | |
| ல் | | | | | | | | | | | | |
| வ் | | | | | | | | | | | | |
| ழ் | | | | | | | | | | | | |
| ள் | | | | | | | | | | | | |
| ற் | | | | | | | | | | | | |
| ன் | | | | | | | | | | | | |

# தமிழ் எழுத்துகள்

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |